## சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

## வாரப்பாடசாலை

## செயலட்டை - 09

Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of

**பாடம்:-பொருளியல்**

**தரம் -12**

**2021. 07. 05 – 2021. 07. 09**

**தேர்ச்சி 6.0 :- பேரினப் பொருளாதார சமநிலை தீர்மானிக்கப்படும் விதத்தை விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 6.3 :- வேறுபட்ட அணுகுமுறையின் கீழ் பேரினப் பொருளாதார சமநிலையை ஆய்வு செய்வார்.**

**பேரினப் பொருளாதார சமநிலையை முன்வைக்கும் அணுகுமுறைகள்.**

1. மொத்த வருமானம் , மொத்த செலவின அணுகுமுறை
2. மொத்த உட்பாய்ச்சல், மொத்த வெளிப்பாய்ச்சல் அணுகுமுறை

❖ **வருமானம் என்பதனால் கருதப்படுவது, மொத்த வெளியீடு (மொத்த வருமானம்) ஆகும்.**

❖ **பொருளாதாரத்தில் மொத்தச் செலவில் (E) வீட்டுத்துறையின் நுகர்வு (C), முதலீட்டுச் செலவு (I), அரச செலவு (G), தேறிய ஏற்றுமதி (X-M) ஆகியன உள்ளடங்கும்.**

❖ $Y = E$

$E = C + I + G + (X - M)$

ஆகவே $Y = C + I + G + (X - M)$

❖ $W = J$

$J = I + G + X$

$W = S + T + M$

ஆகவே $S + T + M = I + G + X$

## பயிற்சிகள்.

01) பொருளாதாரம் ஒன்றில் பின்வரும் தரவுகளை கருத்திற்கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.

நுகர்வு = 1000 + 0.8yd

முதலீடு = 500மி

அரச செலவு = 300மி

வரி = 100மி

ஏற்றுமதி = 380மி

இறக்குமதி = 200மி

1. சமநிலைத் தேசிய வருமானத்தினை காண்க.
2. செலவிடக்கூடிய வருமானம் யாது?
3. நுகர்வுச் செலவு யாது?
4. சேமிப்பு யாது?
5. சமநிலையில் உட்பாய்ச்சல், வெளிப் பாய்ச்சலுக்கு சமனாகும் விதத்தைக் காட்டுக.
6. தன்னிச்சையான செலவு யாது?

02) பொருளாதாரம் ஒன்றில் I = 1200 மில்லியன்களாகவும், S= செலவிடக்கூடிய வருமானத்தில் 25% ஆகவும் G= 500 மில்லியன்களாகவும், T = 200 மில்லியன் களாகவும், X= 300 மில்லியன்களாகவும் , M= 400 மில்லியன்களாகவும் உள்ளது எனவும் பொருளாதாரம் சமநிலையில் உள்ளது எனவும் கருத்திற் கொள்க.

அ ) சமநிலைத் தேசிய வருமானம் யாது?

ஆ ) நுகர்வுச் செலவினம் யாது?